14.03.2024

*OS 457/2019*

**பி.வா.சா.1 மூவேந்திரன்**

**குறுக்கு விசாரணை:-**

நான் 5வது வரை படித்துள்ளேன். நான் அஞ்சல் துறையில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுவிட்டேன். வழக்கு தாக்கல் செய்துள்ள வாதி எனக்கு மைத்துனர் வேண்டும். அவருடைய அக்காவை நான் திருமணம் செய்துள்ளேன். வாதி எதற்காக என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்குத் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண்.269 ஆகும். மொத்த சதுரடி 8-3/4செண்டாகும். என் மீது மாவட்ட குற்ற பிரிவில் வாதி புகார் கொடுத்த விவரம் எனக்குத் தெரியும். எதற்காக புகார் கொடுத்தார் என்று தெரியாது. நான் விசாரணைக்கு சென்றேன். அதன் குற்ற எண் எனக்குத் தெரியாது. அந்த வழக்கில் என் மீதும், என் மனைவி, மகன் மற்றும் ஒரு நபர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கில் ஜாமீன் பெற்றுவிட்டேன். அந்த குற்ற வழக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவின் அடிப்படையில் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மதுரை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1ல் அந்த வழக்கு நடந்து வருகிறது என்றால் நிலுவையில் உள்ளது. என் மீது மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் வாதி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகாரின் விசாரணைக்கு நான் சென்றேன். அந்த விசாரணை முடிவில் நான் வாங்கிய கிரைய பத்திரம் செல்லாது என உத்தரவு போட்டுள்ளார்கள். **மாவட்ட பதிவாளர் வழங்கிய உத்தரவு என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் அது குறுக்கு விசாரணையில் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்-S.கணேசன்
சார்பு நீதிபதி
மேலூர்